பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை

02 10 2024 **WEDNESDAY** 7 15**PM**

வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. தூய்மை இந்தியா இயக்கத்தின் வெற்றிக்காக பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு உலக சுகாதார அமைப்பு பாராட்டு தெரிவித்துள்ளது
2. மேற்கு ஆசியாவில் பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு சம்மந்தப்பட்ட அனைத்து தரப்பினரும் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்று இந்தியா கேட்டுக் கொண்டுள்ளது.
3. ஈரானுக்கு பயணம் மேற்கொள்வதை இந்தியர்கள் தவிர்க்குமாறு மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது.
4. ஐ.நா பொதுச்செயலாளர் திரு. அன்டோனியோ குட்ரஸ், தங்கள் நாட்டில் நுழைவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாக இஸ்ரேல் அறிவித்துள்ளது.
5. உலக கோப்பை ஜுனியர் துப்பாக்கிச் சுடும் போட்டியில் இந்தியா 4 தங்கம், ஒரு வெள்ளிப்பதக்கம் வென்றது.

>>>><<<<

தூய்மை இந்தியா இயக்கத்தின் வெற்றிக்காக பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு உலக சுகாதார அமைப்பு பாராட்டு தெரிவித்துள்ளது.

நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகளை எட்டுவதில் இந்த இயக்கம் முக்கியப் பங்கு வகித்துள்ளதாக உலக சுகாதார அமைப்பின் தலைமை இயக்குநர் திரு. **Tedros Adhanom** கூறியுள்ளார்.

சுகாதாரத்தை பேணுவதற்கும், தூய்மையை பராமரிப்பதற்கும் இந்த இயக்கம் உதவியுள்ளதாக அவர் அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

திறந்த வெளி கழிவறைகளை அகற்றுவதில் இது முக்கியப் பங்கு வகித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

இந்த தூய்மை இந்தியா இயக்கம் காரணமாக, ஊரகப் பகுதிகளில் ஊட்டச்சத்து குறைபாடு களையப்பட்டுள்ளதாகவும், தொற்றுநோய் பாதிப்பு தடுக்கப்பட்டுள்ளதாகவும் திரு. **Tedros Adhanom** தெரிவித்தார்.

>>>><<<<

தூய்மை இந்தியா இயக்கத்தின் கீழ், கடந்த பத்தாண்டுகளில் 11 கோடிக்கும் கூடுதலான எண்ணிக்கையில் தனிநபர் கழிவறைகள் கட்டப்பட்டுள்ளதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு. எல். முருகன் தெரிவித்துள்ளார்.

சென்னை, பல்லாவரத்தில் தூய்மை இந்தியா தின நிகழ்ச்சியில் கலந்து கொண்டு அவர் பேசினார்.

இந்த இயக்கத்திற்காக ஒரு லட்சம் கோடி ரூபாய்க்கும் கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

தூய்மையான சுற்றுப்புறத்தை கட்டமைப்பதற்கு மத்திய அரசு கூடுதல் முக்கியத்துவம் அளித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

இதற்கு நாட்டு மக்கள் அனைவரும் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்றும் திரு. எல். முருகன் கேட்டுக் கொண்டார்.

>>>><<<<

மேற்கு ஆசியாவில் பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு சம்மந்தப்பட்ட அனைத்து தரப்பினரும் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்று இந்தியா கேட்டுக் கொண்டுள்ளது.

அந்த மண்டலத்தின் பாதுகாப்பு சூழல் கவலை அளிப்பதாக வெளியுறவு அமைச்சகத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

எந்தவொரு பிரச்சினைக்கும் பேச்சுவார்த்தையின் மூலமே தீர்வு காணப்பட வேண்டும் என்றும் அதில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

>>>><<<<

ஈரானுக்கு பயணம் மேற்கொள்வதை இந்தியர்கள் தவிர்க்குமாறு மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது.

அத்தியாவசிய பணிகள் இருந்தால் மட்டுமே ஈரானுக்கு பயணம் மேற்கொள்ளுமாறு வெளியுறவு அமைச்சகம் கேட்டுக் கொண்டுள்ளது.

ஈரானில் வசிக்கும் இந்தியர்கள் டெஹ்ரானில் உள்ள இந்திய தூதரகத்துடன் தொடர்பில் இருக்குமாறும் வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஈரானின் பாதுகாப்பு சூழல் குறித்து மத்திய அரசு உன்னிப்பாக கண்காணித்து வருவதாகவும் அதில் குறிப்பிடப்பட்டள்ளது.

>>>><<<<

இதற்கிடையே, ஐ.நா பொதுச்செயலாளர் திரு. அன்டோனியோ குட்ரஸ், தங்கள் நாட்டில் நுழைவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாக இஸ்ரேல் அறிவித்துள்ளது.

இன்று டெல்அவிவில் இதனை தெரிவித்த அந்நாட்டு வெளியுறவுத்துறையின் துணை செய்தி தொடர்பாளர் திரு. **Alex Gandler,** இந்த நடவடிக்கைக்கு உரிய காரணங்கள் இருப்பதாக கூறினார்.

ஈரான் செயல்களை கண்டிக்கத் தயங்கிய திரு. அண்டோனியோ குட்ரஸ், அவர்களுக்கு ஆதரவான நிலைப்பாட்டை எடுத்திருப்பதாகவும் திரு. **Alex Gandler** குறை கூறினார்.

>>>><<<<

கம்போடியாவிற்கு போலி முகவர்கள் மூலம் வேலைக்குச் சென்ற 67 இந்தியர்கள் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளனர்.

**Phnom Penh-**ல் உள்ள இந்திய தூதரகம், கம்போடிய காவல்துறையினருடன் இணைந்து மேற்கொண்ட நடவடிக்கைகளின் போது இவர்கள் பாதுகாப்பாக மீட்கப்பட்டனர்.

போலி முகவர்கள் மூலம் வேலைக்கு தேர்வு செய்யப்பட்ட இவர்கள், இணைய குற்றங்களில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளதாக அதிகாரிகள் கூறினர்.

மீட்கப்பட்டவர்களில் 39 பேர் இந்தியாவிற்கு அனுப்பப்பட்டுள்ளனர். எஞ்சியுள்ளவர்களும் அடுத்த சில நாட்களில் அனுப்பி வைக்கப்படுவார்கள் என்று தூதரக அதிகாரிகள் தெரிவித்தனர்.

**>>>><<<<**

பீகாரின் 16 மாவட்டங்கள் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன.

இதன் காரணமாக 16 லட்சத்திற்கும் மேற்பட்டோர் பாதிப்புக்கு உள்ளாகியிருப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிவாரண உதவிகள் மற்றும் மீட்புப் பணிகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அம்மாநில அரசு கூறியுள்ளது.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் உணவுப் பொட்டலங்களை வழங்கி வந்த, விமானப்படையின் ஹெலிகாப்டர் தொழில்நுட்ப கோளாறு காரணமாக, அவசரமாக முஸாபர்பூர் மாவட்டத்திற்கு உட்பட்ட **Aurai** பகுதியில் இன்று தரையிறக்கப்பட்டது.

ஹெலிகாப்டரில் இருந்த நான்கு விமானிகளும் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டனர்.

மழை வெள்ளம் காரணமாக பாதிப்புக்குள்ளான வேளாண் விளைநிலத்தில் ஹெலிகாப்டர் தரையிறக்கப்பட்டது.

**>>>><<<<**

பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு வழங்கப்பட்ட பரிசுப் பொருட்களுக்கான மின்னணு ஏலம், வரும் 31ஆம் தேதிவரை நீட்டிக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

கடந்த மாதம் 17ஆம் தேதி தொடங்கிய இந்த மின்னணு ஏலம் இன்றுடன் முடிவடையவிருந்த நிலையில், இந்த நீட்டிப்பு அறிவிக்கப்பட்டுள்ளது.

600க்கும் மேற்பட்ட பரிசுப் பொருட்கள் ஏலத்தில் இடம்பெற்றுள்ளதாகவும் மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

**>>>><<<<**

உத்தரபிரதேசத்தில் சட்ட விரோதமாக செயல்பட்ட பட்டாசு ஆலையில் நேரிட்ட வெடிவிபத்தில் 5 பேர் உயிரிழந்தனர், பலர் காயமடைந்தனர்.

**Bareilly** மாவட்டத்திற்கு உட்பட்ட பகுதியில் இன்று பிற்பகல் இந்த விபத்து நேரிட்டதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

இடிபாடுகளுக்கு இடையே பலர் சிக்கியிருக்கக்கூடும் என்றும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

விபத்து நடந்த பகுதியில் மீட்புப் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருவதாக அவர் மேலும் கூறுகிறார்.

>>>><<<<

தமிழகத்தில் உள்ள, அரசு சட்டக் கல்லூரிகளில் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்புவது தொடர்பாக வரும் 15ஆம் தேதி சட்டத்துறை செயலர் நேரில் ஆஜராகி விளக்கமளிக்க வேண்டும் என்று சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பான மனுவினை விசாரணை செய்த நீதிபதி திரு. பட்டு தேவானந்தா இதற்கான உத்தரவை பிறப்பித்தார்.

இந்த காலிப் பணியிடங்களை குறிப்பிட்ட காலத்திற்குள் நிரப்புவதற்கான செயல் திட்டம் குறித்தும் சட்டத்துறைச் செயலர் விளக்கமளிக்க வேண்டும் என்றும் அந்த உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>><<<<

தமிழகத்தில் உள்ள தருமபுரி பண்பலை வானொலி ஒலிபரப்பு, இன்று 18வது ஆண்டில் அடியெடுத்து வைத்துள்ளது.

கல்வி, விவசாயம் மற்றும் பல்சுவை நிகழ்ச்சிகளை வழங்குவதில் வானொலி தனித்துவமாக திகழ்வதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - தண்டபாணி 45 செகண்ட்ஸ்)

>>>><<<<

யுக்ரைனின் **Vuhledar** நகரை ரஷ்ய பாதுகாப்புப் படையினர் தங்களது முழு கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்துள்ளனர்.

கடந்த இரண்டு வருடங்களாக இந்த நகரை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்காக ரஷ்ய பாதுகாப்புப்படையினர் தாக்குதலை நடத்தி வந்தனர்.

>>>><<<<

உலக கோப்பை ஜுனியர் துப்பாக்கிச் சுடும் போட்டியில் இந்தியா 4 தங்கம், ஒரு வெள்ளிப்பதக்கம் வென்றது.

பெருவின் லிமாவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் 25 மீட்டர் ஆடவர் பிரிவில் **Mukesh Nellavalli** யும், மகளிர் பிரிவில் **Divinshi** யும் தங்கப்பதக்கம் வென்றனர்.

ஆடவர் மற்றும் மகளிர் 25 மீட்டர் குழுப் பிரிவுகளிலும் இந்தியாவிற்கு தங்கப்பதக்கம் கிடைத்தது.

ஆடவர் 25 மீட்டர் பிரிவில் சுரஜ் சர்மா வெள்ளிப்பதக்கம் வென்றார்.

இப்போட்டியில் இந்தியா இதுவரை 10 தங்கம், ஒரு வெள்ளி, 3 வெண்கலப்பதக்கங்களை வென்று பதக்கப்பட்டியலில் முதலிடத்தில் உள்ளது.

>>>><<<<

உலக ஜூனியர் கலப்புக் குழு சாம்பியன் பேட்மிண்டன் போட்டியில், இந்தியா காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

சீனாவின் **Nanchang**-ல் நடைபெற்று வரும் இப்போட்டியின் கடைசி லீக் ஆட்டத்தில் இந்தியா இன்று துருக்கியை வென்றது.

காலிறுதிப் போட்டியில் இந்தியா - இந்தோனேஷியாவை எதிர்கொள்கிறது.

>>>><<<<

டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளுக்கான சர்வதேச தரவரிசை பட்டியலின் பந்துவீச்சுப் பிரிவில் இந்தியாவின் பும்ரா முதலிடத்தை பிடித்தார்.

பேட்டிங் பிரிவில் ஜெய்ஸ்வால் மூன்றாவது இடத்திற்கும், விராட் கோலி ஆறாவது இடத்திற்கும் முன்னேறியுள்ளனர்.

>>>><<<<

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான முதலாவது இளையோர் கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் இந்தியா 2 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

>>>><<<<

உலக கோப்பை மகளிர் டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டிக்கான பயிற்சி ஆட்டத்தில் இந்தியா 28 ரன் வித்தியாசத்தில் தென்னாப்பிரிக்காவை வென்றது.

>>>><<<<

உலக கோப்பை கோகோ போட்டி, அடுத்த ஆண்டு இந்தியாவில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. 24 நாடுகள் இதில் பங்கேற்கின்றன.

>>>><<<<

செஸ் போட்டிகளுக்கான சர்வதேச தரவரிசைப் பட்டியலின் மகளிர் பிரிவில் இந்தியாவின் **Koneru Humpy** ஆறாவது இடத்தில் உள்ளார்.

>>>>END<<<<